**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),**
**நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590**

**ஆணை நாள் 11.06.2026**

**முன்னிலை**
**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். NC 3069/E/2021**

திரு.சொ.குமார் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை

******

**ஆணை**

1) இவ்வழக்கு குறித்த ஆவணங்களை இன்று (10.06.2026) பரிசீலித்த ஆணையம் இவ்வாணையத்தின் 19.06.2025 நாளிட்ட உத்தரவை இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர்/சோழிங்கநல்லூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இன்று வரையில் (11.06.2026) நிறைவேற்றவில்லை என்பதை இவ்வாணையம் கண்டனத்துடன் பதிவு செய்கிறது

2) ஆகவே, **இவ்வாணையத்தின் 19.06.2025 நாளிட்ட உத்தரவு பத்தி 5(i)-ன்படி மேல்முறையீட்டாளருக்கு தகவலை வழங்கி அதனை மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டது** குறித்த அறிக்கையை **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

3) மேலும், இவ்வாணையத்தின் **19.06.2025 நாளிட்ட உத்தரவு பத்தி 5(ii)-ன்படி**, மேல்முறையீட்டாளருக்கு குறித்துரைத்த காலக்கெடுவிற்குள் தகவல் வழங்காத அன்றைய சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலக முன்னாள் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து எழுத்துமூலமான விளக்கத்தை பெற்று **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நேரில் சமர்ப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/ மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

4) இவ்வாணையத்தின் **19.06.2025 தேதியிட்ட உத்தரவினை நிறைவேற்றத் தவறிய காரணத்தால் அன்றைய விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர்** மீது தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அதிகபட்ச அபராதம் ஏன் விதிக்கலாகாது என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அவரது உயரதிகாரிக்கு ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தையும் அவரிடமிருந்து பெற்று **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

5) மேலும், இவ்வாணையத்தின் **19.06.2025** நாளிட்ட உத்தரவு பத்தி 5(ii)-ன்படி, மேல்முறையீட்டாளருக்கு குறித்துரைத்த காலக்கெடுவிற்குள் தகவல் வழங்காத அன்றைய சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலக முன்னாள் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து எழுத்துமூலமான விளக்கத்தை பெற்று சமர்ப்பிக்க தவறிய **(19.06.2025 தேதியில்) சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழ் அவர் மீது துறை வாரியான நடவடிக்கை**

**மேற்கொள்ள ஏன் உத்தரவிடக்கூடாது என்பதற்கான எழுத்துமூலமான பெற்று இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று தென்சென்னை வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு தென்சென்னை வருவாய் கோட்டாட்சியருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

6) மேலும், இவ்வாணையத்தின் 19.06.2025 நாளிட்ட உத்தரவை நிறைவேற்றாமல் மனுதாரருக்கு தகவல் வழங்குவதில் காலதாமதம் செய்தததற்கும், மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தியதற்காகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் மனுதாரருக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இழப்பீடாக பொது அதிகார அமைப்பு வழங்கி மனுதாரர் அதை ஏற்பளிப்பு செய்த விவரத்தினை **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

7) மேற்குறித்த உத்தரவுகளை நிறைவேற்ற தவறும்பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்று **தென்சென்னை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு** இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். NC 3069/E/2021**

பெறுநர்

வருவாய் கோட்டாட்சியர்,
தென்சென்னை கோட்டம்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
கிண்டி, சென்னை-32.

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
தென்சென்னை கோட்டம்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
கிண்டி, சென்னை-32.

மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்.
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்,

பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம். சோழிங்கநல்லூர் வட்டம், (19.06.2025 தேதியில்)
சென்னை மாவட்டம்
(மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர் சோழிங்கநல்லூர் மூலமாக)

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்.
சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை மாவட்டம்

திரு சொ.குமார்,
5 வேம்புலி பண்ணைக்காரன் தெரு,
உள்ளகரம், சென்னை.91.

Copy to File
CR/PA